**S.T.C No. 78/2021**

**Dated: 24.02.2025**

**PW: 1** முத்துவடிவேலன்

**(Witness has been administered Oath U/s 3 of the Oaths Act 1969)**

**குறுக்கு விசாரணை:**

1. நீங்கள் என்ன படித்துள்ளீர்கள் என்றால் நான் 12ம்வகுப்பு படித்துள்ளேன். நீங்கள் சொன்ன தகவலின் அடிப்படையில் தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீங்கள் அஞ்சலக சிறுசேமிப்பு முகவராக பணிபுரிவது சம்பந்தமான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரி எந்த ஊரில் எந்தபெயரில் டிராவல்ஸ் நடத்திவருகிறார் என்பதை உங்களது வழக்கு ஆவணங்களில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான் . அதைப்போல் எதிரி எவ்வளவு காலமாக உங்களுக்கு பழக்கம் என்பதையும் உங்களது வழக்கு ஆவணங்களில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆனால் அவரை 10 ஆண்டுகளாக தெரியும்.

2. தாவாகடன்தொகையை எவ்வாறு தயார் செய்தீர்கள் என்றால் என்னுடைய சிறுசேமிப்பாக வங்கியிலிருந்த தொகையை எடுத்துகொடுத்தேன். அதைப்போல் எனது மகளின் கல்லூரி படிப்பிற்காக சேர்த்து வைத்திருந்த பணத்தையும் சேர்த்துகொடுத்தேன். உங்களுக்கு எந்தெந்த வங்கிகளில் வங்கிகணக்குகள் உள்ளன என்றால் கோவில்பட்டி தமிழ்நாடுமெர்கண்டைல் வங்கி, இந்தியன் வங்கி, உள்ளது. மேற்படி இரண்டு வங்கி கணக்குகளின் வரவு செலவு விபரத்தை பார்வையிட்டால் எதிரிக்கு வங்கியிலிருந்து பணம் எடுத்துகொடுத்தீர்களா அல்லது இல்லையா என்ற விபரம் தெரியவரும் என்றால் எனது வங்கிகணக்கிலிருந்து கொஞ்ச பணமும் , எனது மனைவியின் வங்கிகணக்கிலிருந்து பணமும் எடுத்துகொடுத்தேன்.

3. உங்களது மனைவிக்கு எந்த வங்கியில் வங்கிகணக்கு உள்ளது என்றால் கோவில்பட்டி, கனரா வங்கி, இந்தியன் வங்கி. நீங்கள் வேறுதொழில் செய்யவில்லை என்றால் வீட்டிலிருந்தவாறே Job work செய்து வருகிறேன். இதன் மூலமாக மாதவருமானம் வருகிறது என்றால் வேலையை பொறுத்து வருமானம் வரும். நீங்கள் வருமானவரி கணக்குதாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எந்தெந்த இடங்கள் மற்றும் தேதிகளில் எதிரி பணம் கேட்டார் என்பதை உங்களது புகார் மனுவில் சொல்லியிருக்கிறிர்களா என்றால் ஆமாம்.நீங்கள் சொல்வதுபோல் அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல.

4. உங்களது மனைவி என்ன தொழில் செய்து வருகிறார் என்றால் அவர் அஞ்சலகத்தில் மாதந்திர மகளில் சிறுசேமிப்புமுகவராக பணிபுரிந்து வருகிறார்.

**எதிரி தரப்பில் வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.**

Taken before me in open court, read over to the witness and admitted by the deponent to be Correct.

Sd/-Thiru.K.Baskar
Judicial Magistrate,
Fast Track Court(Magisterial Level),
Kovilpatti.